**செய்தி வெளியீடு எண் : 1404** **நாள் : 15.07.2023**

**மாண்புமிகு வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்கள் 12.07.2023 முதல் 14.07.2023 வரை தோட்டக்கலை துறை சார்பாக சிங்கப்பூர் அரசுமுறைப் பயணத்தில் பார்வையிட்ட இடங்கள்**

சென்னையில் முக்கியமாக செம்மொழிப் பூங்கா, செங்காந்தள் பூங்கா, மாதவரம் பூங்கா, வண்ணாரப்பேட்டை பூங்கா போன்ற இடங்களை பயன்படுத்தவும், சிங்கப்பூர் மற்றும் மேலைநாடுகளில் உபயோகப்படுத்துகின்ற பூங்காக்களின் தரத்திற்கு இணையாக தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையிலும் பராமரிக்கப்பட்டு வரும் பூங்காக்களை மேம்படுத்திட, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கினங்க 13.07.2023 அன்று சிங்கப்பூர், தேசிய தாவரவியல் பூங்காவானது எவ்வாறு பராமரிக்கப்படுகிறது எனவும் பூங்காவில் வளர்க்கப்படும் மரங்கள் மற்றும் இதர பூக்கள் வகையறா போன்றவைகள் குறித்து, சிங்கப்பூர் தேசிய பூங்காவின் முதுநிலை பூங்கா இயக்குநர் திரு. சூவா ஹாக் சியாங், துணை இயக்குநர் (நூலகம், பயிற்சி மற்றும் விரிவாக்கம், பாதுகாப்பு) பேராசிரியர் நூரா Bte. அப்துல் கரீம் ஆகியோர் அப்பூங்கா எவ்வாறு கட்டமைக்கப்பட்டுள்ளது என்பதை விளக்கினர். இதனை தொடர்ந்து தேசிய தாவரவியல் பூங்காவின் துறை அலுவலர்களுடன் மாண்புமிகு வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்கள் மற்றும் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் டாக்டர் ஆர். பிருந்தாதேவி இ.ஆ.ப., ஆய்வு செய்தனர்.

பின்னர் சிங்கப்பூர் மெரினா நீர்த் தேக்கத்தின் அருகில் Gardens by the Bay என்ற மற்றொரு பூங்காவினையும், முதுநிலை இயக்குநர், பூங்கா பராமரிப்பு திரு. கேரி சூவா (Gary Chuo) உதவி முதுநிலை நிர்வாக அலுவலர் திருமதி மே யோ (May Yeo) ஆகியோர் அப்பூங்காவின் சிறப்பு அம்சங்களையும், அங்கு காட்சிப்படுத்தப்பட்ட அனைத்து பூக்களின் வகைகள், ரோஜா தோட்டம், உலகிலேயே மிகப்பெரிய செயற்கை நீர்வீழ்ச்சி அமைப்பு, செயற்கை நீர் ஊற்று போன்ற பல புதிய அம்சங்களை பார்வையிட்டு அப்பூங்கா எவ்வாறு கட்டமைக்கப்பட்டு, அதன் பயன்பாடு மக்களுக்கு எவ்வாறு உதவுகின்றன என்பதை நேரடியாக பார்வையிட்டு அறிந்து கொண்டனர். மேலும் மரங்கள் வண்ண விளக்குகளோடு எவ்வாறு காட்சிப் படுத்தப்படுகின்றன என்பதை நேரடியாக பார்வையிடப்பட்டது.

14.07.2023 அன்று சிங்கப்பூர் Jewel Changi பூங்காவினை பார்வையிட்டு ஆய்வுகள் மேற்கொண்டார்.

இந்நிகழ்ச்சிகளில் சிங்கப்பூரை சார்ந்த உயர் அலுவலர் திரு. பிரபாகர், I.R.S., உடன் இருந்தார்.

இதுபோன்ற முயற்சிகளின் மூலம் தமிழகத்தில் உள்ள பூங்காக்களை மேம்படுத்திட தேவையான திட்டங்களை உருவாக்கிட சிங்கப்பூர் அரசு முறைப் பயணம் மிகவும் உபயோகமாக அமைந்தது என்று மாண்புமிகு வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்கள் தெரிவித்தார்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**